| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.ப.யோகராஜா, பி.இ.,<br>உறுப்பினர் செயலர் (பொ),<br>மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்,<br>மாநகராட்சி அலுவலக வளாகம்,<br>3-ம் தளம், அண்ணா மாளிகை,<br>மதுரை -2.<br>E.mail –ID : mlpa_ctcp@yahoo.in<br>www.tn.gov.in/dtcp | இயக்குநர்,<br>மேக்ஸ் பிராப்பர்ட்டீஸ் பிரைவேட் லிமிடெட்,<br>மேக்ஸ் பிளாசா முதல் தளம்,<br>அருணாச்சலம் தெரு,<br>S.S.காலனி,<br>மதுரை - 625 010 |
| ந.க.எண்.841/2017/மதி.2 | நாள் : 12.06.2017 |

ஐயா,

பொருள் : மதுரை உள்ளூர் திட்டப்பகுதி, மதுரை மாநகராட்சி, அங்கீகரிக்கப்பட்ட மாடக்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3, மாடக்குளம் கிராமம், சர்வே எண்.342/3 pt மற்றும் 8 pt-ல் 1843.95 ச.மீ பரப்பளவு கொண்ட மனைக்கு 'A முதல் F' வரை எல்லைமிட்டு ம.வு/ம.உ.தி.கு எண்.47/2014 என எண்ணிடப்பட்டு 3 ஆண்டுகளுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டது - 5 ஆண்டுகளாக திட்ட அனுமதி காலம் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1)உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் செயலாணை கடிதம் ந.க.எண்.2009/2012/மதி.2, நாள் 07.11.2014
2)இயக்குநர், மேக்ஸ் பிராப்பர்ட்டீஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை அவர்களின் விண்ணப்பம் நாள் 24.05.2017
3)தமிழ்நாடு அரசிதழ் எண்.8, பாகம்-IV, பிரிவு-2, பக்கம் எண்.61, நாள் 30.03.2017
4)அரசு செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை கடிதம் எண்.4981/UD4/2017, நாள் 06.03.2017
5)நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25437/2014/GR, நாள் 02.05.2017

---------

மதுரை உள்ளூர் திட்டப்பகுதி, மதுரை மாநகராட்சி, அங்கீகரிக்கப்பட்ட மாடக்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3, மாடக்குளம் கிராமம், சர்வே எண்.342/3 pt மற்றும் 8 pt-ல் 1843.95 ச.மீ பரப்பளவு கொண்ட மனைக்கு 'A முதல் F' வரை எல்லைமிட்டு ம.வு/ம.உ.தி.கு எண்.47/2014 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் ஸ்டில்ட் தளம் + 4 தளங்களுடன் கூடிய மொத்தம் 3541.38 ச.மீ பரப்பளவுடன் கூடிய குடியிருப்பு கட்டுமானத்திற்கு 07.11.2014 முதல் 06.11.2017 தேதி வரை மூன்று ஆண்டுகளுக்கு பார்வை 1-ல் கண்ட கடிதம் மூலம் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் கண்ட அரசாணையில் 31.03.2017-க்கு முன்னர் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் திட்ட அனுமதி ஐந்து ஆண்டு காலம் திட்ட அனுமதி காலமாக அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் உத்தேச கட்டுமானத்திற்கான திட்ட அனுமதி காலம் 06.11.2019 வரை நடைமுறையில் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர் மதுரை மாநகராட்சி ஆணையாளரை அணுகி கட்டிட அனுமதிக்கான கால நீட்டிப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

12/6/17

உறுப்பினர் செயலர் (பொ)
மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்

12/6/2017



# மதுரை மாநகராட்சி

## மண்டலம்: 4

## இணையதள கட்டிட உரிமையாணை உத்திரவு

**கட்டிட அனுமதி எண்: ம4/294/18** நாள் : 28/07/2018

1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 276 வது பிரிவின் கீழ் சேர்க்கப்படும் கட்டிடத்தின் உரிமையாணை வழங்குதல் சம்பந்தமாக.

மனுதாரரின் பெயர் : Max Properties Private Limited  அலைபேசி எண் : 9842314181

கதவு எண் : -  நில அளவை எண் : T.S.No: 18/4G,18/4F(Old R.S.No: 342/3 & 8pt)  வட்டம் எண் : 75

மனை / கட்டிட முகவரி : T.S.NO:18/4F,4G Madakulam Village, Madurai

காலி மனை / வீட்டுவரி விதிப்பு எண் : 04520

**உறுப்பினர் செயலர் மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் செயல்முறை ஆணை எண் ந.க.எண் 2009/2012மதி2 நாள் 07.11.2014ல் திட்ட அனுமதி எண் 47/2014 -ல் வழங்கப்பட்டுள்ளது**

மனு பெற்ற நாள் : 29/06/2018

கட்டிடத்தின் வகை : Residential  இணையதள பரிசீலனை எண் : MTZ4 - 1373

கட்டிடத்தின் பரப்பளவு : தரை தளம் :698.59 sq.m, முதல் தளம் : 698.59 sq.m, இரண்டாவது தளம் : 698.59 sq.m மூன்றாவது தளம்: 698.59 sq.m, நான்காவது தளம்: 698.59 sq.m, ஐந்தாவது தளம்(Headroom): 48.43 sq.m

செலுத்தப்பட்ட கட்டணங்களின் விபரம் பின்வருமாறு

| வரிசை எண் | கட்டண விவரங்கள் | தொகை |
|---|---|---|
| 1 | விண்ணப்ப கட்டணம் | 500.00 |
| 2 | வரைபட பரிசீலனை கட்டணம் | 1,500.00 |
| 3 | உரிமையாணை கட்டணம் | 196,000.00 |
| 4 | கட்டிட பொருள் சேமிப்புக் கட்டணம் | 196,000.00 |
| 5 | கட்டிடம் இடிப்பதற்கான கட்டணம் | 0.00 |
| 6 | இணையதள சேவைக் கட்டணம் | 38,120.00 |
| 7 | பாதாள சாக்கடை பங்களிப்பு தொகை | 140,000.00 |
| 8 | சாலை அமைப்புக் கட்டணம் | 0.00 |
| 9 | உள் கட்டமைப்பு அபிவிருத்தி கட்டணம் | 0.00 |
| 10 | உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக்கட்டணம் | 226,650.00 |
| 11 | அபராத கட்டணம் | 0.00 |
| 12 | உள்ளூர் திட்ட குழுமம் அபிவிருத்தி கட்டணம் | 0.00 |
| 13 | மனை ஒப்புதல் கட்டணம் | 0.00 |
| 14 | தொழிலாளர் நல நிதி கட்டணம் | 179,455.00 |

### உத்திரவு

இதில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி கோரிய கட்டிட வேலைகளுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தின்படி உரிமையாணை வழங்கப்படுகிறது.
அனுமதி நாள் முதல் ஆறு மாதத்திற்குள் கட்டிட வேலை ஆரம்பிக்கபட வேண்டும். இந்த அனுமதி பிறப்பித்த நாள் முதல் இரண்டு ஆண்டு காலத்திற்கு பொருந்தும்.
அனுமதி பிறப்பித்த நாள் முதல் இரண்டாண்டிற்குள் கட்டிட வேலை முடிக்கப்பட வேண்டும். அரசாணை எண் 140 (ந. நி மற்றும் கு.வ.துறை ) நாள் : 11.10.2002 ன்படி மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும். கட்டிட உரிமையாணை அனுமதி முடியும் நாள் :27/07/2020

பெறுபவர்

Max Properties Private Limited

No:12, Shanmuganathapuram 3rd Street, Madurai

உதவி செயற்பொறியாளர் (திட்டம்)

நகல் : உதவி பொறியாளர் (திட்டம்) / இளநிலை பொறியாளர் (திட்டம்)
கட்டிடம் கட்டுமானத்தை கண்காணிக்க

(பொது நிபந்தனைகள் பின்பக்கம் பார்க்க)

# பொது நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் அடித்தளமானது (Plinth) மனையின் மட்டத்திலிருந்து 45 செ.மீ குறைவாக இருத்தல் கூடாது. படிக்கட்டு, குறடு, மறைவு போன்றவை மனுதாரரின் மனை வரம்புக்குள் இருத்தல் வேண்டும். எவ்வகையான ஆக்கரமிப்புகளும், அரசினர் அல்லது மாநகராட்சி நிலத்திலோ அல்லது தெருவிலோ செய்யக்கூடாது.
2. சூரிய மறைவு, சாளரச் சாய்ப்பு, வீட்டிறப்பு அல்லது அதைபோல் கட்டியிடத்திலிருந்து நீட்டி வரும் எந்த பகுதியும் தெருச்சாலையின் மேல் அமைத்தல் கூடாது.
3. ஈரம் ஊறிக்கசியாத விதத்தில் அடித்தரை அமைக்கப்படவேண்டும்.
4. மக்கள் குடியிருக்க செய்வதற்காக உத்தேசிக்கப்படும் ஒவ்வொரு அறையும் வெளிப்புற காற்றுடன் நேரடியாக சம்பந்தப்படுவது மூலமாக காற்று நன்றாக வரும் பொருட்டு போதுமான ஜன்னல்களையும் ஏற்படுத்தி வைக்கவேண்டும்.
5. சமையல் அறையில் நெருப்பு மூட்டப்படும் ஒவ்வொரு இடத்திலும் எரியும் இடத்திற்கு நேர் மேலாக புகையோ, நெருப்பு பற்றியுள்ள பொருள்களாவது வெளியே போவதற்கு செங்கற்கட்டு அல்லது நெருப்பு பற்றி எரியாத பொருள்களால் புகைபோக்கி கட்டப்பட வேண்டும்.
6. வராந்தாவில் வீட்டிறப்பு (Eaves) வரும்போது அதன் உயரம் 2.13மீ குறைவாயிருத்தல் கூடாது.
7. கழிவறைகளை சுத்தம் செய்ய சுத்திகரிப்பாளர் செல்ல வசதியான தனிப்பாதை அமைக்க கவனம் செலுத்தப்படவேண்டும்.
8. பாதாள சாக்கடை வசதியுள்ள பகுதியில் கட்ட உத்தேசிக்கும் கட்டிடங்களுக்கு மாநகராட்சி பொறியாளர் இலாகாவின் மேற்பார்வையில் பாதாள சாக்கடை மலப்பிறை அமைக்கப்படவேண்டும்.
9. கட்டியிடத்திலுள்ள மழைத்தண்ணீரும் அழுக்குத்தண்ணீரும் மற்றும் சாக்கடை தண்ணீரும் நன்றாக வந்து போவதற்காக சாதனங்களை ஏற்படுத்தி வைக்க வேண்டியது அல்லாமல் அவை பாதாள சாக்கடையில் மனுதாரரின் செலவிலும் மாநகராட்சி பொறியாளர் இலாகாவின் மேற்பார்வையிலும் இணைக்கப்படவேண்டும்.
10. கட்டியிடத்திற்கும் மின்சார கம்பிகளுக்கு இடைப்பட்ட இடைவெளி அதற்குரிய விதிகளில் கண்டபடி விடப்படவேண்டும்.
11. மதுரை மாநகராட்சி சட்டம் 128வது பிரிவின்படி கட்டிடம் கட்டி முடித்த அல்லது குடிவந்த இவற்றில் எது முந்தியோ அதிலிருந்து 15 தினங்களுக்குள் ஆணையாளர் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இந்த நிபந்தனையை மீறுபவர்கள் ரூ.1000 வரை அபராதம் விதிக்கப்படத்தக்கவராவர்.
12. தமிழ்நாடு பொது சுகாதாரசட்டம் 26 மற்றும் 33வது பிரிவுகளின்படி சாக்கடை வசதி செய்யப்பட்டிருப்பது போதுமானது என மாநகராட்சி நகர் நல அதிகாரி அவர்களிடமிருந்து அத்தாச்சி பெறவேண்டும்.
13. கட்டிட இடிபாடுகள் நிமித்தம் ஏற்படும் கழிவு பொருட்கள் மற்றும் கட்டிட தளவாடச் சாமான்களை தெருவிலோ பாதையிலோ கொட்டுவதை தவிர்க்கவேண்டும்.
14. ஒழுங்கீன முறைகள் கடைபிடித்தோ அல்லது செய்தியை மாறுபாடாக எடுத்துக் கொள்ளும் வகையில் தெரிவித்தோ அல்லது ஏமாற்றுதலாகவோ அல்லது திரித்துக் கூறியோ அல்லது இது போன்ற இதர காரணங்களாலோ உத்திரவு பெறப்பட்டது என்று நிர்வாக அதிகாரியின் கவனத்திற்கு தெரிய வந்தால் இரு உத்திரவும் ரத்து செய்ய ஏதுவாகும்.

உறுப்பினர் செயலர் (பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்,மதுரை அவர்களின்
செயல்முறை ஆணை
முன்னிலை : திரு ப.மரியதாசன், பி.இ.,

ந.க.எண். 2009/2012/மதி 2

நாள் : 7.11.14

பொருள் : கட்டிடம் -மதுரை உள்ளூர் திட்டப்பகுதி - மதுரை மாவட்டம் - மதுரை மாநகராட்சி - மாடக்குளம் கிராமம் - அங்கீகரிக்கப்பட்ட மாடக்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 3 (பழைய சர்வே எண் 342/3pt (ம) 8pt) புதிய சர்வே வார்டு XXII, பிளாக் எண் 7, நகரளவை எண் 18/4F (ம) 18/4G –ல் 1843.95 ச.மீ பரப்பளவு கொண்ட மனைக்கு மனையிட ஒப்புதலும், அம்மனையில் ஸ்டில்ட்தளம் முழுவதும் வாகன நிறுத்துமிடம், முதல்தளம், 2-ம் தளம், 3-ம் தளம் மற்றும் 4-ம் தளத்தில் தலா 7 குடியிருப்புகள் வீதம் மொத்தம் 28 குடியிருப்புகள் உபயோகத்திற்கு திட்ட அனுமதி அளித்து - உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை :

1) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 5450/2013/BA1 நாள் 31.10.2013.
2) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 14.3.2013.
3) அரசாணை(நிலை) எண். 86 வீ.வ (ம) ந.பு.வ.துறை நாள். 28.3.2012.
4) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 7486/2009/BA2 நாள் 16.4.2009.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 21075/2009/BA1 நாள் 4.4.2012.
6) மதுரை உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண் 45, நாள் 3.7.2013.
7) மனுதாரர் M/s MAX Properties (p) Limited, கடிதம் நாள் 28.11.2013, 25.9.2013 (ம) 29.10.2014.
8) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண் 12641/14/சிபி நாள் 18.7.2014.

----------

உத்தரவு :

மதுரை உள்ளூர் திட்டப்பகுதி, மதுரை மாநகராட்சி, அங்கீகரிக்கப்பட்ட மாடக்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 3, மாடக்குளம் கிராமம், சர்வே எண் 342/3pt (ம) 8pt –ல் 1843.95 ச.மீ பரப்பளவு கொண்ட மனைக்கு A முதல் F வரை என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் கீழ்க்கண்டவாறு கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்கவும், பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணை கடிதத்தில் இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

| தள விபரம் | Non FSI Area Sq.m | FSI Area Sq.m | மொத்தம் ச.மீ | பயன்பாடு |
|---|---|---|---|---|
| ஸ்டில்ட் தளம் | 698.59 | ----- | 698.59 | வாகனம் நிறுத்துமிடம் |
| முதல் தளம் | 25.56 | 673.03 | 698.59 | 7 குடியிருப்புகள் |
| 2-ம் தளம் | 25.56 | 673.03 | 698.59 | 7 குடியிருப்புகள் |
| 3-ம் தளம் | 25.56 | 673.03 | 698.59 | 7 குடியிருப்புகள் |
| 4-ம் தளம் | 25.56 | 673.03 | 698.59 | 7 குடியிருப்புகள் |
| Head Room | 48.43 | --- | 48.43 | -- |
| மொத்தம் | 849.26 | 2692.12 | 3541.38 | 28 குடியிருப்புகள். |

மேற்கண்ட உத்தேச 28 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு திட்ட விதி 8(viii) -ஐ தளர்த்தி மனை ஒப்புதல் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் இசைவு அளிக்கப்பட்டுள்ளத.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ./ந.ஊ.இ.எண் 229/2013 என எண்ணிட்டு பெறப்பட்டுள்ளது.

**சிறப்பு நிபந்தனைகள்.**

1) "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புபத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2) It is the responsibility of the builders /developers / land owners to ensure the safe bearing capacity of the soil.

3) " Planning Permission is issued in accordance with the Provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural Stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. However Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction".

4) பார்வை 8-ல் காண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி Quarterly submission of Certificate by the owner / developer to the Local Body regarding execution of work மற்றும் Completion Certificate தொடர்பாக இணைப்பில் கண்டுள்ள சான்றுகள் பெற்று கட்டிடத்தின் உறுதித்தன்மையை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.

நிபந்தனைகள் :

1) உத்தேச 28 குடியிருப்புகள் கொண்ட பலகுடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு "Solar Water heating system" அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு Stilt Floor வாகன நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால், இவ்வலுவலகத்தில் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002ன்படி கட்டிடத்தில் செயல்படுத்த வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேற தேவையான வசதிகளை மனுதாரர் சொந்த செலவில் மேற்கொள்வதுடன் கட்டடத்திற்கு தேவையான குடிநீர் மற்றும் இதர தண்ணீர் வசதி மனுதாரால் ஏற்படுத்தப்பட வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டடத்தில் தீயணைப்புத்துறை வழி காட்டுதலுக்கேற்ப தீயணைப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

9) அரசாணை எண்.341, ந.நி (ம) கு.வ. (நநி1) துறை நாள் 3.11.04-ன்படி செப்டிக் டாங்கில் 'U' Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும்படி குறைந்தபட்ச அளவு 60 செ.மீ X 120 செ.மீ அளவில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

மனுதாரர் உரிய நன்னிலை வரியாக ரூ.3,100/- (ரூபாய் மூவாயிரத்து நூறு மட்டும்) அரசுக் கணக்கில் 30.8.2014-ல் செலுத்தியுள்ளார். மதுரை உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு வளர்ச்சிக் கட்டணமாக ரூ.19,350/- (ரூபாய் பத்தொன்பதாயிரத்து முன்னூற்று ஐம்பது மட்டும் ) வங்கி வரைவோலை எண் 243777 SBI நாள் 30.8.2014-ல் செலுத்தியுள்ளார்.

பார்வை 3-ல் காணும் அரசாணையின்படி உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணத்தொகை ரூ.5,29,000/- ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்தி ஒன்பதாயிரம் மட்டும்) அரசு கணக்கில் 30.8.2014 -ல் செலுத்தியுள்ளார்.

மேற்கண்ட உத்தேச பலகுடியிருப்பு கட்டிடத்திற்குரிய வடிவமைப்பு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண். 47/2014 (1/3 to 3/3) என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

திட்ட அனுமதி நாள் - 7.11.2014.
திட்ட அனுமதி முடிவுறும் நாள் - 6.11.2017.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக மதுரை மாநகராட்சி ஆணையாளரை அணுகிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரருக்கு தொடர்ந்து உத்திரவினை வழங்கிட மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உறுப்பினர் செயலர் (பொ),
மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்.

இணைப்பு
1) முத்திரையிடப்பட்ட வரைபடம் 2 தொகுப்பு.
2) Quarterly submission Certificate & Completion Certificate தொடர்பான சான்று படிவங்கள்.

பெறுநர்
ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி.

நகல்
M/s MAX Properties (p) Limited,
அருணாசல தெரு,
வடக்கு வாசல்,
S.S.காலனி,
மதுரை -10.